*Kalanjiyam International Journal of Tamil Studies* ISSN: 2456-5148 (Online)
*An international, peer-reviewed quarterly academic research journal* www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p396-408** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# தமிழ் இலக்கியத்திலும் திருவிவிலியத்திலும் விருந்தோம்பலின் சிறப்பிடம்

The Prominence of Hospitality in Tamil Literature and the Holy Bible: A Comparative Study

**முனைவர் சகோதரி தோ.கிரேசி,**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (அரசு உதவி பெறும் பிரிவு),*
*நிர்மலா மகளிர் கல்லூரி, (தன்னாட்சி) கோவை.*
**Dr. Sr. T. Gracey*,**
*Assistant Professor, Department of Tamil (Aided Stream)*
*Nirmala College for Women (Autonomous), Coimbatore.*
*Email: fspmgracy@gmail.com, Tel: 092260010*

*Article history*
Received: 10-08-2026
Revised: 10-08-2026
Accepted: 12-08-2026
**Published: 13-08-2026**
*Corresponding Author Email: fspmgracy@gmail.com

**Abstract:** Fostering love and virtue is the hospitality found in domestic life. Hospitality is a noble quality essential for both household life and asceticism. From past to present, everyone has practiced hospitality and held it in high regard. Tamil literature and the Holy Bible both highlight the special place of hospitality.

In line with the saying "Guest means novelty," the Tamil heart rejoiced in welcoming relatives and non-relatives alike. Tamils practiced hospitality keeping in mind the Kural: "As the Anicham flower fades when smelt, so fades a guest when faces turn away."

This article explores the details of hospitality indicated in texts such as Tirukkural, Naladiyar, Neethimozhi, and Purapporul Venbamalai. Furthermore, hospitality references found in Sangam literature such as Narrinai, Tolkappiyam, and Manimekalai, along with the traditions of Abraham and others in the Old and New Testaments of the Holy Bible, are comparatively analyzed to identify the similarities and differences between the two traditions. This article also emphasizes the social significance of the virtue of hospitality in today's nuclear family setup.

**Keywords:** *Love, Welcoming, Hospitality, Duty of Hospitality, Cooking with Love.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

அன்பையும், பண்பையும் வளர்ப்பது இல்லறத்தில் காணப்படும் விருந்தோம்பலாகும். விருந்தோம்பல் இல்லறத்திற்கும், துறவறத்திற்கும் தேவையான உயரிய பண்பாகும். அன்று முதல் இன்று வரை அனைவரும் விருந்தோம்பலை மேற்கொண்டு, உயர்வாகக் கருதி வருகின்றனர். தமிழிலக்கியங்களும், திருவிவிலியமும் விருந்தோம்பலின் சிறப்பிடத்தை எடுத்துரைக்கின்றன. 'விருந்தே புதுமை' என்பதற்கேற்ப வருகைபுரிந்த உறவினர், உறவினரல்லாதார் ஆகியோரை வரவேற்று மகிழ்ந்தது தமிழர் உள்ளம். 'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' என்ற குறளைக் கருத்தில் கொண்டு விருந்தோம்பல் செய்தவர் தமிழர் ஆவர். திருக்குறள், நாலடியார், நீதிமொழி, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூற்கள் சுட்டும் விருந்தோம்பல் செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன. மேலும், சங்க இலக்கியமான நற்றிணை, தொல்காப்பியம், மணிமேகலை ஆகியவற்றில் இடம்பெறும் விருந்தோம்பல் குறிப்புகளும், திருவிவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் காணப்படும் ஆபிரகாம் முதலான விருந்தோம்பல் மரபுகளும் ஒப்பிட்டு ஆராயப்பட்டு, இரு மரபுகளுக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகள் இனங்காணப்படுகின்றன. இன்றைய தனிக்குடும்பச் சூழலில் விருந்தோம்பல் பண்பின் சமூகப் பொருண்மையும் இக்கட்டுரையில் வலியுறுத்தப்படுகிறது.

**கருச்சொற்கள்**

அன்பு, வரவேற்றல், விருந்தோம்பல், விருந்தின் கடமை, அன்போடு சமைத்தல், ஒப்பீட்டு இலக்கியம், திருவிவிலியம்.

## 1. முன்னுரை

அன்பையும் பண்பாட்டையும் ஒருசேர வளர்க்கும் இடம் இல்லறமாகும். இல்லறம் நல்லறமாகத் திகழவும், தவம் பேணப்படவும், அருள் காத்து நிற்கவும், மனிதர்களிடம் தேவைப்பட வேண்டிய அடிப்படையான பண்பு விருந்தோம்பலாகும். எனவே தான் சங்ககாலம் தொட்டு, போற்றப்பட வேண்டிய பண்பாக விருந்தோம்பல் காணப்படுகிறது. வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் அமர வைத்து உண்ணக் கொடுப்பதிலிருந்து, அவர்களைக் கவனித்து வழியனுப்பும் வரை இனிதாகப் பழகும் குணத்தில் பண்பாடு வெளிப்படுகிறது. அரசர்கள், உயர்குடி மக்கள், பாமர மக்கள் என்று அனைவரும் நாடி வரும் அனைவருக்கும் விருந்தோம்பி பல்லுயிர் காத்து வந்தனர் என்கிறது தமிழ்மரபு. இதனடிப்படையில் தமிழ் இலக்கியத்திலும் திருவிவிலியத்திலும் விருந்தோம்பலின் சிறப்பினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. உலக அளவில் பல்வேறு பண்பாடுகளும் தத்தம் இலக்கிய, சமய மரபுகளில் விருந்தோம்பலை ஒரு புனிதக் கடமையாகவே பதிவு

செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது; அவற்றுள் தமிழ் மரபும் யூத-கிறித்தவ மரபும் விருந்தோம்பலை அறத்தின் இன்றியமையாத கூறாகக் கருதுகின்றன.

## 2. ஆய்வு நோக்கமும் முறையியலும்

இக்கட்டுரையின் முதன்மை நோக்கம் தமிழ் இலக்கிய மரபிலும் திருவிவிலிய மரபிலும் விருந்தோம்பல் எனும் கருப்பொருள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்வதாகும். திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, புறப்பொருள் வெண்பாமாலை, நீதிவெண்பா, விவேக சிந்தாமணி, வெற்றிவேற்கை, நல்வழி ஆகிய பதினெண்கீழ்க்கணக்கு, நீதி இலக்கிய நூல்களும், நற்றிணை, தொல்காப்பியம், மணிமேகலை ஆகிய சங்க, பிற்சங்க கால நூல்களும் முதல்நிலை மூலங்களாகக் கொள்ளப்பட்டு, திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நீதிமொழிகளும், புதிய ஏற்பாட்டு லூக்கா நற்செய்தி, எபிரேயர் நிருபம் ஆகியவையும் ஒப்பீட்டு மூலங்களாகக் கையாளப்படுகின்றன. இவற்றுடன், சர்வதேச ஆய்விதழ்களில் வெளிவந்த திறந்தநிலை (open access) ஆய்வுக் கட்டுரைகளும், இணையவழி அறிவுசார் தளங்களும் இரண்டாம்நிலை மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டு, உரையாடல் பகுப்பாய்வு (textual analysis) மற்றும் ஒப்பீட்டு இலக்கிய முறையியல் (comparative literary method) வழி இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## 3. தமிழ் மரபில் விருந்தோம்பல்: சங்க இலக்கியம் முதல் நீதி இலக்கியம் வரை

### 3.1 சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

விருந்தோம்பலின் வேர்கள் சங்க காலத்திலேயே ஆழப் பதிந்துள்ளன. இலக்கண நூலான தொல்காப்பியமும், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையும், பத்துப்பாட்டு நூலான சிறுபாணாற்றுப்படையும் விருந்தோம்பலைப் பெருஞ்சிறப்புடன் பதிவு செய்துள்ளன. இரவுப் பொழுதிலும் விருந்தினர் வந்தால் அவரை உபசரிக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழும் இல்லற மகளிரைப் பற்றி நற்றிணை பேசுகிறது (நற் பா.எ.142). தொல்காப்பியர் மனையறம் பேணும் தலைவியின் உயர் பண்புகளுள் விருந்தோம்பலை முதன்மையாக வைத்து, 'விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்' (தொல். களவியல் 11) எனக் குறிப்பிடுகிறார். இக்கருத்தை அடியொற்றியே பிற்காலத்தில் தோன்றிய மணிமேகலையிலும் உணவளித்தலே அறத்தின் அடிப்படை எனப் போற்றப்படுகிறது; 'அறம் எனப்படுவது யாது எனக்கேட்பின் மறவாது இதுகேள் மண் உயிர்க்கு எல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல்' (மணிமேகலை 25.288-291) எனும் வரிகள் உணவின் முதன்மையை உணர்த்துகின்றன.

### 3.2 நீதி இலக்கியங்களில் விருந்தோம்பல்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் விருந்தோம்பலுக்கெனத் தனி அதிகாரமே (அதிகாரம் 9) படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' (குறள் 81) எனும் முதல் குறள் வழியே இல்வாழ்க்கையின் முதன்மை நோக்கமாக விருந்தோம்பலை வள்ளுவர் முன்வைக்கிறார். நாலடியார், ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, புறப்பொருள் வெண்பாமாலை, நீதிவெண்பா, விவேக சிந்தாமணி, வெற்றிவேற்கை ஆகிய நூல்களும் இதே கருத்தை வெவ்வேறு கோணங்களில் விளக்குகின்றன. இவை அனைத்தும் இல்லற வாழ்வின் நிறைவு விருந்தோம்பலிலேயே அடங்கியுள்ளது எனும் தமிழ் மரபின் ஒருமித்த குரலை எடுத்துரைக்கின்றன.

### 4. அன்புடன் பேண வேண்டிய விருந்தோம்பல்

இல்லம் தேடி வருவோர் உறவுமுறையாயினும், அயலாராயினும் இனிதாய், மகிழ்ச்சியுடன் உணவு கொடுத்து உபசரிப்பதே அக்கால வழக்கமுறை. இன்றும் அதே நிலை தான் நிலவுகிறது. மகிழ்ச்சியில்லாமல் பிறரது இல்லத்தில் பல சுவையுடன் உணவு உண்பதை விடவும், உரிமையுடைய உறவுமுறையாரிடம் வெறும் அரிசி சோற்றை உண்பதே இனியதும் மேலானதுமாகும். இச்செய்தியை

**உப்பிலிப் புற்கை உயிர்போல் கிளைஞர் மாட்டு**
**எக்காலத் தானும் இனிது. (நால 206)**

என்ற நாலடியார் பாடல் இனிய விருந்தோம்பலின் மேன்மையை உணர்த்துகிறது. அன்புடன் கூடிய விருந்தோம்பல் கொடுப்பவருக்கும் மனநிறைவைத் தரும். பெறுபவருக்கும் அதுவே இன்பத்தை அதிகரிக்கும். விருந்தோம்பலின் நிறைவும் அதில் தான் முழுமை பெறுகிறது. மனம் விரும்பி, மலர்ந்த முகத்துடன் உபசரித்து, உண்மை பேசி, உப்பில்லாமல் கூழே இட்டாலும் அவ்வுணவு அமிர்தமாக இருக்கும். மா, பலா, வாழை முக்கனிகளோடு பால் சோற்றை அன்பில்லாது முகம் சுருங்கிக் கொடுத்தால் பசி அதிகமாகுமேயன்றி அது தணியாது. மனத்திற்கும் நிறைவைத் தராது. கொடுப்பதை அன்போடு மனமலர்ந்து தரவேண்டும் என்பதை விவேக சிந்தாமணியில்

**ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மைபேசி**
**உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும். (விவேக பா.எ.3)**

எனும் பாடலில் அன்பே தலையாயது என்றும், அன்போடு கொடுப்பதை மட்டுமே பெற வேண்டுமென்னும் அரிய செய்தியை எடுத்துரைக்கிறது. விருந்தின் தலையாயப் பண்பே அன்பு

என்பதால் விருந்துக்குச் செல்பவரும் அன்பில்லாத இடத்தில் விருந்தினை ஏற்காது இருத்தலே சிறந்தது. வள்ளுவரும் இக்கருத்தினைப் பதிவு செய்யும் போது

**மோப்பக் குழையும் அணிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து. (குறள். 90)**

என்று முகமலர்ந்து இடப்படாத விருந்தினை ஏற்போர் முகம் வாடிவிடும் என்பதை அறிவுறுத்துகிறார். இதனை அடியொற்றி விவிலியத்திலும்,

**சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட**

**மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே மேல். (நீ.மொ 17:1)**

எளிய உணவே கடுமையான விருந்தோம்பலைத் தவிர்க்க ஒரே வழியெனவும் காட்டப்படுகிறது. விருந்திற்கு முதன்மையானது அன்பும் மனநிம்மதியும் ஆதலால் உணவு அளிப்பவர் மனநிறைவையும் விருந்தோம்பலையும் சேர்த்து அளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வீட்டிலும் விருந்தினரிடமும் சண்டையிட்டு உணவளிப்பது நாகரிகமான செயலாக அமையாது. அன்பும் பகைமையும் ஒரே இடத்தில் இருக்க இயலாது. எனவே பகைமை தான் விருந்தோம்பலுக்குப் பெரிய எதிரி. எனவே பகைவர் அளிக்கும் இறைச்சி உணவை விடவும் அன்புள்ளவர் அளிக்கின்ற காய்கறி உணவே மேலானது. எளிய உணவானாலும் அது அன்புடன் பரிமாறப்பட வேண்டும் என்ற கருத்தினை விவிலியத்தில்

**பகை நெஞ்சம் கொண்டோர் படைக்கும்**

**நல்ல இறைச்சி உணவைவிட**

**அன்புள்ளம் உடையவர் அளிக்கும்**

**மரக்கறி உணவே மேல். (நீ.மொ 15:17)**

என்னும் வரிகள் சுவை நிறைந்த இறைச்சி உணவை விடவும் காய்கறியால் ஆன எளிய உணவே சிறப்பானது என்ற கருத்தினை வலியுறுத்துகிறது. இன்முகம் காட்டி வரவேற்றால் விருந்தினர் மகிழ்வர் என்றும் கடுமுகம் காட்டினால் வருந்துவர் என்றும் எடுத்துரைக்கிறது. ஆதலால், மலர்போன்ற தன்மையுடையவர் விருந்தினர் என்பதனை

**நோக்கினே திரியும் புக்கன விருந்து. (பா.எ.90)**

என்ற மேற்காண் குட்டிக்குறள் பாடலடி எடுத்துரைக்கிறது.

### 5. விருந்தினரை உபசரித்தல் கடன்

செல்வத்திற்கு அழகு என்பது விருந்தோம்பலில்தான் அடங்கியுள்ளது. வரும் விருந்தினரை ஆதரித்து உணவளிப்பது இல்லறத்தாரின் கடமையாகும். இதனை உணராதவர் அறியாமையில் இருப்பதற்குச் சமமாகும். ஆதலால், விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் மனமில்லாதவர் செல்வம் படைத்தவராய் இருப்பினும் வறுமையுடையவராவர் என்னும் செய்தியினை

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**

**மடமை மடவார்கண் உண்டு. (குறள் 89)**

என்ற குறள் வழி விருந்தின் கடமையை உணர்த்துகிறது. அறச்செயல்களில் தலையாயது பசித்தோர்க்கும் விருந்தினர்க்கும் உணவளிப்பது ஆகும். நிலையற்ற செல்வம் மீது ஆசை வைக்காமல் அறவழியில் உங்கள் சிந்தனையை செலுத்தி, இரவலர்களின் பசித்த வயிற்றுக்குச் சோறிடுவதும், அவர்கள் பருகுவதற்குத் தண்ணீரும் கொடுக்க வேண்டியது கடமையாகும். இப்படிச் செய்தலால் இந்தத் தருமமே உங்களுக்கு என்றும் துணை நிற்கும். உள்ளமும் தூயதன்மை உடையதாக இருக்கும் என்ற கருத்தினை நல்வழி

**ஆறிடு மேடும் மடுவும்போல் ஆம் செல்வம்**

**மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்**

**தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக**

**உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (பா.எ.32)**

என்ற பாடலின் வழி விளக்குகிறது. விருந்தின் கடமையையும் அழகுற எடுத்துக்காட்டுகிறது. இல்லறமாயினும் துறவறமாயினும் விருந்தோம்பல் கடமையென்பது அறியலாகிறது. இதனை

'உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று, நண்பா, மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகக் கொடு. என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும் வழியில் என்னிடம் வந்திருக்கிறார். அவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். உள்ளே இருப்பவர், எழுந்து கொடுக்காவிட்டாலும், அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.' (லூக் 11:5-8)

என்ற திருவிவிலிய பகுதி, விருப்பம் இல்லாவிட்டாலும் ஒருவர் கொடுக்கும் தொல்லையின் பொருட்டாவது, விருந்தளித்தல் வேண்டும் என்பதைக் கூறுகிறது.

### 6. விருந்தோம்புவார் அடையும் மறுமைப்பயன்

விருந்தோம்பும் பண்புடையவர் பலரால் பாராட்டப்படுகிறார். இப்பண்பினால் அவரைப் பலரும் நாடிச்செல்வர். இவ்வாறு தம்மை நாடி வரும் விருந்தினரை விருந்தோம்பி வழியனுப்பி வைத்து, மீண்டும் வரும் விருந்தினரை ஆவலுடன் எதிர்நோக்கும் பண்புடையவரைப் பெரியோர் போற்றுவர் என்று குறள் (86) எடுத்துக்காட்டுகிறது. விருந்தினர்களைப் பேணும் நற்பண்புடைய இல்லறத்தானை, வானவர் விரும்புவர் என்ற கருத்தினைக் குட்டித்திருக்குறள்

**விருந்துகாப் போனை விரும்புமால் வானே. (பா.எ. 86)**

என்ற பாடலடி எடுத்தியம்புகிறது. விருந்தோம்புவாரின் மேன்மை என்றும் போற்றப்பட வேண்டிய ஒரு பண்பு என்பதனை நீதிபோத வெண்பாவில்

**தேர்ந்து விருந் திற்களிப்பான் தேவருக்கு நல்விருந்தாச்**
**சார்ந்தவனன்............. (பா.எ.15)**

என்ற பாடலடி விருந்தினை அளிப்பவர் தேவர்களுக்குச் சமமானவர் என்பதை எடுத்தியம்புகிறது. இக்கருத்தினை அடியொற்றி விவிலியத்தில்,

**அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு**
**விருந்தோம்பியதால் சிலர் தாங்கள்**
**அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு. (எபி 13 : 2)**

என்ற வார்த்தைகள் விருந்தோம்புவார் அடையும் பயனை எடுத்துக்கூறுகிறது. இச்செய்தியை வலியுறுத்தும் வகையில் நற்றிணை, இரவுப்பொழுதாகவே இருந்த போதிலும், விருந்தினர் வந்தனராயின், அவரை உபசரிக்கும் வாய்ப்பு நேர்ந்தமைக்கு உவப்படைவர், இல்லிலிருந்து நல்லறம் பேணும் கற்பச் செவ்வியையுடையவள் (நற் பா.எ.142) என்று கூறுகிறது.

### 7. விருந்தின் பயன் அளவிடற்கரியது

விருந்தின் பயன் என்பது அளவிட இயலாதது. விருந்தின் பயனை எதனுடனும் ஒப்பிட முடியாது. விருந்தாகிய வேள்வியின் பயன் முன்பு வானமும் சிறியதேயாகும். அவ்வாறே விருந்தினராக வந்தவரின் பயனை எண்ணிப்பார்த்து, விருந்தோம்பலை வேள்வியாகக் கருதவேண்டும் என்பதை வள்ளுவர்,

**இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன். (குறள் 87)**

எனும் குறள்வழி விளக்குகிறார். உணவளித்தல் பற்றிய விதிமுறைகளை உரைக்குமிடத்து ஆசாரக்கோவை என்னும் நூலில், இல்லத்திற்கு வந்த விருந்தினர், இல்லத்தில் இருக்கும் மூத்தவர்கள், வளர்க்கும் பசு, வளர்ப்புப் பறவைகள், வளர்ப்புப் பிள்ளைகள் இவர்கள் யாவருக்கும் உணவு கொடுத்த பின்னரே ஒழுக்கம் பிழையாதவர்கள் உண்பர். அதற்கு முன்னர் அவர்கள் உண்ணமாட்டார்கள் என்ற செய்தியை,

**விருந்தினர் மூத்தோர் ................. (பா.எ.21)**

என்ற பாடலடி உணர்த்துகிறது. உணவளித்தலின் சிறப்பினையும் அறியமுடிகிறது. புகழையும் பெருமையும் சேர்ப்பது ஒருவர் இவ்வுலகில் செய்யும் புண்ணியங்கள் மற்றும் தருமங்களில் அடங்கியுள்ளது. விருந்தினை ஓம்பி உயிர்கள் வாழ, பயனுடன் செயல்படுபவர் யாவரும் வேள்வியின் பயனை அடைவர் என்பதனை,

**நின்ற புகழொடு நீடுவாழ் இவ்வலகில்**
**ஒன்ற உயிர் தளிர்ப்ப ஓம்பலால் - வென்றமருள் (புறப்.வெ.மா 215)**

என்ற பாடலடியின் மூலம் அறியலாகிறது. உணவின் பயனென்பதும், சிறப்பென்பதும் உண்பதாலேயே முதன்மை வகிக்கிறது. இச்செய்தியை

**உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல். (பா.எ.10)**

எனும் வெற்றிவேற்கை பாடலடி எடுத்துரைக்கிறது. விருந்தை அன்போடு சமைப்பதும், அதனைப் பண்புடன் வந்தோருக்குப் பேணுவதும் சிறப்புக்குரியதாகிறது. இக்கருத்தை நான்மணிக்கடிகையில்

**கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி**
**நன்றூட்ட நந்தும் விருந்து. (பா.எ.63)**

என்ற பாடல் விருந்தால் மனம் மகிழும் என்பதை எடுத்துரைக்கிறது. கன்றானது பாலை உண்ணும்போது மனம் மகிழும் பசுவைப் போல, விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் போது அவர்களின் மனம் மகிழும். விருந்தினரின் மகிழ்ச்சியால் தான் விருந்தை அளிப்பவரின் மனமும் நிறைவு பெறுகிறது.

## 8. திருவிவிலியத்தில் விருந்தோம்பலின் இறையியல் பரிமாணம்

### 8.1 ஆபிரகாமின் முன்மாதிரி (ஆதியாகமம் 18)

திருவிவிலிய மரபில் விருந்தோம்பலுக்கு முன்மாதிரியாகக் கருதப்படுவது ஆபிரகாமின் வரலாறே ஆகும். ஆதியாகமம் 18ஆம் அதிகாரத்தில், மம்ரேயின் திடல்களில் தங்கியிருந்த ஆபிரகாம், அறியாத

மூவரை வரவேற்று, விரைந்தோடி நீர் கொணர்ந்து, கன்றொன்றை அடுத்து, அப்பம் சுட்டு உபசரித்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னாளில் அவர்கள் இறைத்தூதர்கள் என அறியப்பட்டதால், அறியாமலே தேவதூதரை உபசரித்த நிகழ்வாக இது யூத, கிறித்தவ இலக்கியங்களில் மீண்டும் மீண்டும் நினைவுகூரப்படுகிறது. இந்நிகழ்வின் அடிப்படையில் 'இறை உருவம் (imago Dei)', 'உறவுநிலை', 'சார்பியல்பு', 'பயணிகளாக மனிதர்' எனும் நான்கு இறையியல் தூண்களின் மீது விவிலிய விருந்தோம்பல் கட்டமைக்கப்பட்டுள்ளது என ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். ஆபிரகாமைத் தொடர்ந்து, ரகாபு எபிரெயர் ஒற்றர்களை வரவேற்றதும், எலியா செரிபாத்தூர் விதவையிடம் தங்கியதும், எலிசா சூனேம் பெண்மணியால் உபசரிக்கப்பட்டதும் பழைய ஏற்பாட்டு விருந்தோம்பல் மரபின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன.

### 8.2 புதிய ஏற்பாட்டில் விருந்தோம்பல்

கிரேக்க மூலத்தில் 'விருந்தோம்பல்' எனும் சொல் 'பிலோக்ஸெனியா' (philoxenia) என அழைக்கப்படுகிறது; இதன் நேரடிப் பொருள் 'அன்னியரிடம் அன்பு செலுத்துதல்' என்பதாகும். 'அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு' (எபி 13:2) எனும் எபிரேயர் நிருபம், ஆபிரகாமின் நிகழ்வையே நினைவுகூர்ந்து விருந்தோம்பலை ஒரு கிறித்தவக் கடமையாக முன்வைக்கிறது. இதேபோன்று, 'உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று...' (லூக் 11:5-8) எனும் இயேசுவின் உவமையும், 'சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே மேல்' (நீ.மொ 17:1) மற்றும் 'பகை நெஞ்சம் கொண்டோர் படைக்கும் நல்ல இறைச்சி உணவைவிட அன்புள்ளம் உடையவர் அளிக்கும் மரக்கறி உணவே மேல்' (நீ.மொ 15:17) எனும் நீதிமொழிகளும் அன்பே விருந்தோம்பலின் உயிர்நாடி என்பதை வலியுறுத்துகின்றன.

## 9. தமிழ் இலக்கியமும் திருவிவிலியமும்: ஒப்பீட்டு பார்வை

தமிழ் இலக்கியமும் திருவிவிலியமும் விருந்தோம்பல் எனும் கருப்பொருளை அணுகும் விதத்தில் பல ஒற்றுமைகளையும், சில வேற்றுமைகளையும் காணமுடிகிறது. இரண்டு மரபுகளுமே, உணவின் தரத்தை விடவும் அன்போடு அளிக்கும் மனநிலையே முதன்மையானது என்பதை வலியுறுத்துகின்றன; 'உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்' (விவேக பா.எ.3) எனும் தமிழ் கருத்தும், 'மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே மேல்' (நீ.மொ 17:1) எனும் விவிலியக் கருத்தும் இதற்குச் சான்றாகும். மேலும், இரண்டு மரபுகளுமே விருந்தோம்பலுக்கு மறுமைப் பயனை இணைத்துக் கூறுகின்றன — தமிழ் மரபில் 'வானவர் விரும்புவர்' (பா.எ.86) என்றும், விவிலிய மரபில்

'அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு' (எபி 13:2) என்றும் கூறப்படுவது இணையான கருத்தாகும். எனினும் வேற்றுமை நிலையில் நோக்கும்போது, தமிழ் மரபு விருந்தோம்பலை இல்லற அறத்தின் ஒரு பகுதியாகவும், ஐம்பெரு வேள்விகளுள் ஒன்றாகவும் வகைப்படுத்துகிறது (குறள் 87); விவிலிய மரபோ விருந்தோம்பலை இஸ்ரவேலர் எகிப்தில் அன்னியராய் வாழ்ந்த வரலாற்று நினைவின் அடிப்படையிலும், இறைவனுடனான உடன்படிக்கை உறவின் அடிப்படையிலும் முன்வைக்கிறது. அதாவது, தமிழ் மரபில் விருந்தோம்பல் 'குடும்ப/சமூக அறம்' எனும் கோணத்தில் முதன்மைப்படுத்தப்படுகிறது; திருவிவிலிய மரபில் அது 'இறையியல் நினைவுகூர்தல்' எனும் ஆழமான பரிமாணத்துடன் இணைக்கப்படுகிறது. இருப்பினும், இரண்டு மரபுகளும் இறுதியில் சேர்ந்தடையும் புள்ளி ஒன்றே — அன்பு இல்லாத விருந்தோம்பல் பயனற்றது என்பதாகும்.

## 10. இன்றைய சூழலில் விருந்தோம்பலின் பொருண்மை

கூட்டுக் குடும்ப அமைப்பிலிருந்து தனிக் குடும்ப அமைப்புக்கு மாறிய நவீன வாழ்க்கை முறையில், விருந்தோம்பல் எனும் பண்பாடு படிப்படியாகக் குறைந்து வருவதாக அவதானிக்கப்படுகிறது. நகரமயமாக்கல், வேலைப்பளு, தனிமைச் சூழல் ஆகியவை உறவினரையும், அன்னியரையும் வரவேற்கும் பண்பாட்டுப் பழக்கத்தைக் குறைத்துள்ளன. இத்தகைய சூழலில், தமிழ் இலக்கியமும் திருவிவிலியமும் முன்வைக்கும் விருந்தோம்பல் மதிப்பீடுகள் — அன்பு, பகிர்தல், அன்னியரை ஏற்றல் — இன்று மேலும் பொருண்மை வாய்ந்தவையாக மாறியுள்ளன. பன்முகச் சமூகத்தில் வெவ்வேறு சமய, இன, மொழிப் பின்புலம் கொண்டோரிடையே பரஸ்பர மரியாதையையும் நல்லிணக்கத்தையும் வளர்க்க, விருந்தோம்பல் எனும் பொதுவான மனித மதிப்பீடு ஒரு பாலமாக அமையக்கூடும். எனவே, விருந்தோம்பல் என்பது வெறும் பழங்கால வழக்கமன்று; அது இன்றைய கால கட்டத்திற்கும் தேவையான ஒரு சமூக அறமாகும்.

## 11. தொகுப்புரை

விருந்தோம்பல் என்பது விருந்தினரைப் போற்றிக் காத்தல் ஆகும். கடமையின் பொருட்டும், அன்பின் பொருட்டும், முகம் வருந்தாது இன்முகத்துடன், வேறுபாடில்லாத அன்புடைய இருவர் இணைந்து செய்யும் விருந்தின் சிறப்பு, பயன், அன்புடன் பேண வேண்டிய தன்மை, விருந்தில் உபசரித்தல் கடமை, விருந்தோம்புவார் எய்தும் பயன் முதலானவற்றின் சிறப்பினைத் தமிழ் இலக்கியத்திலும் திருவிவிலியத்திலும் எடுத்தியம்பும் பாங்கினை இக்கட்டுரை வழி அறியமுடிகிறது. சங்க இலக்கியம் தொடங்கி நீதி இலக்கியங்கள் வரையிலான தமிழ் மரபும், ஆபிரகாம் முதல் இயேசுவின் உவமைகள் வரையிலான திருவிவிலிய மரபும் ஒரே இலக்கை நோக்கியே பயணிக்கின்றன — அஃதாவது,

அன்போடு கூடிய, மனநிறைவு தரும் விருந்தோம்பலே மனித வாழ்வின் மாண்பைப் பறைசாற்றும் மாபெரும் அறமாகும் என்பதே. இவ்வொப்பீட்டு ஆய்வு, பண்பாடுகள் வேறுபட்டாலும் மனித மதிப்பீடுகள் பொதுவானவை என்பதையும், விருந்தோம்பல் என்பது காலம் கடந்து நிலைத்து நிற்கும் உலகளாவிய அறம் என்பதையும் நிரூபிக்கிறது.

### துணைநூற் பட்டியல் (Works Cited — MLA 9வது பதிப்பு)


[1]. ஆசாரக்கோவை. பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1975.

[2]. ஔவையார். நல்வழி. பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1975.

[3]. திருவள்ளுவர். திருக்குறள். உரை: மு. வரதராசனார், தமிழ்ப் பல்கலைக்கழகம், 2005.

[4]. தொல்காப்பியர். தொல்காப்பியம் — பொருளதிகாரம், களவியல். உரை: இளம்பூரணர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1988.

[5]. நல்வழி. காண்க ஔவையார்.

[6]. நாலடியார். நீதி இலக்கியத் தொகுப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், 1989.

[7]. நான்மணிக்கடிகை. பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1985.

[8]. நீதிவெண்பா. பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1985.

[9]. நற்றிணை. எட்டுத்தொகை நூல் தொகுப்பு. உரை: பொ. வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1970.

[10]. புறப்பொருள் வெண்பாமாலை. உரை: அடியார்க்குநல்லார், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1985.

[11]. மணிமேகலை (25. காதை). உரை: பொ. வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1980.

[12]. விவேக சிந்தாமணி. நீதி இலக்கிய நூல் தொகுப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், 1978.

[13]. வெற்றிவேற்கை. பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1985.

[14]. திருவிவிலியம் — நீதிமொழிகள், லூக்கா நற்செய்தி, எபிரேயர் நிருபம். தமிழ் பொது மொழிபெயர்ப்பு, திருநெல்வேலி பைபிள் சொசைட்டி, 2000.

[15]. "விருந்தோம்பல்." விக்கிப்பீடியா — தமிழ்ப் பதிப்பு, விக்கிமீடியா அறக்கட்டளை, 2026, ta.wikipedia.org/wiki/விருந்தோம்பல். அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[16]. காளியப்பன், புலவர். "திருக்குறளில் விருந்தோம்பல்." Pulavar Kaliappan Blog, 14 மே 2017, pulavarkaliappan.blogspot.com/2017/05/blog-post_14.html. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[17]. "வள்ளுவர் கூறும் விருந்தோம்பல் — Portrayal of Hospitality in Thirukkural." Thirukkural Essays, 12 ஜூலை 2021, thirukkuralessays.blogspot.com/2021/07/portrayal-of-hospitality-in-thirukkural.html. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[18]. "பகுதி 6.3 — விருந்தோம்பல்." தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy), tamilvu.org/ta/courses-degree-c011-c0113-html-c0113603-13660. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[19]. "திணையிலக்கியத்தில் விருந்தோம்பல்." முத்துக்கமலம் இணைய இதழ், muthukamalam.com/essay/literature/p113.html. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[20]. முத்துலட்சுமி. "தமிழரின் விருந்தோம்பல் பண்பு." Kamaraj Journal of Academic Research, kcjournal.ac.in, www.kcjournal.ac.in/webupload/uploadfile/1546265073002Tamil_Dr.MuthuLakshmi.pdf. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[21]. "தமிழரின் விருந்தோம்பல் பண்புகள்." International Research Journal of Tamil, irjt.iorpress.org/index.php/irjt/article/download/1049/715/2331. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[22]. "விருந்து — அன்றும் இன்றும்." வல்லமை இணைய இதழ், 10 அக்டோபர் 2017, www.vallamai.com/?p=80471. அணுகப்பட்ட நாள் 20 ஆகஸ்ட் 2026.

[23]. Hobbs, T. R., et al. "Old Testament Foundations for Christian Hospitality." Verbum et Ecclesia, vol. 35, no. 1, 2014, scielo.org.za/scielo.php?script=sci_arttext&pid=S2074-77052014000100004. Accessed 20 Aug. 2026.

[24]. "Hospitality in the Old Testament." NOBTS — Geaux Therefore, New Orleans Baptist Theological Seminary, 26 Apr. 2021, www.nobts.edu/geauxtherefore/articles/2021/Hospitality.html. Accessed 20 Aug. 2026.

[25]. "Biblical Hospitality: Inviting Outsiders to be Family." Faithward.org, 9 Dec. 2019, www.faithward.org/biblical-hospitality-outsiders-family/. Accessed 20 Aug. 2026.

[26]. "Why Must Christian Hospitality Be Biblically Illumined and Culturally Rooted?" Barnabas Today, 12 Aug. 2022, www.barnabastoday.com/2022/05/faith-reflection-why-must-christian-hospitality-be-biblically-illumined-and-culturally-rooted/. Accessed 20 Aug. 2026.

[27]. "Hospitality in the Old Testament." Truth and Tidings, 2022, truthandtidings.com/2022/05/hospitality-in-the-old-testament/. Accessed 20 Aug. 2026.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.